## DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 118/17 |
| Deposition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | சரோஜா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது முத்து கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன், 8.6.2016 ம் தேதியன்று பகல் 3 மணியளவில் திருமண நிகழ்ச்சிக்காக நானும் எனது கணவரும் இருசக்கர வாகனத்தில் ( பதிவு எண் தெரியவில்லை) சென்று பிறகு திரும்ப வீட்டிற்கு வரும் போது குரங்கனி ரோட்டில் 2 ம் பண்ணைவிளைக்கு மேல்பக்கம் எனது கணவர் வண்டியை ஓட்ட நான் பின்னால் அமர்ந்திருந்தேன். நாங்கள் கிழக்கிலிருந்து மேற்காக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது எதிரே வேகமாக வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது. சம்பவ இடத்திலே என் கணவர் விபத்தின் காரணமாக இறந்துவிட்டார். சம்பவத்தினால் வலது கை எழும்பு

முறிவு ஏற்பட்டு தற்போது steel வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. எங்களுக்கு பின்னால் வந்த இன்னொரு இருசக்கர வாகனத்தில் வந்தவரையும் மோதி விபத்து ஏற்பட்டது அந்த வாகனத்தில் வந்தவரின் கால் துண்டாகிவிட்டது. சம்பவத்தின் போது எதிரே வந்த காரை ஓட்டி வந்தவர் பின்னால் பெயர் கேட்டு தெரிந்தவகையில் மைதீன் பிச்சை என்றும் அவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். (எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது) விபத்தின் காரணமாக காயம் அடைந்த நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்க்கப்பட்டேன். நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 118/17 |
| Deposition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | ரமேஷ் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 20-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது முத்து கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன், விபத்தில் இறந்தது என் தகப்பனார் ஆவார். விபத்து சமயத்தில் நான் வேலையில் இருந்த போது என் உறவினர் சுரேஷ் தகவல் சொல்ல எனது தாயாரும் தகப்பனாரும் ஏரலுக்கு சென்று திரும்ப இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது scrpio car அதன் ஓட்டுனர் வேகமாக ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக என்னிடம் சொன்னார். எனது தகப்பனார் விபத்தில் இறந்து போனதால் அவரது பிரேத விசாரணையின் போது நான் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். காரை ஓட்டி வந்த நபர் மைதீன் பிச்சை என்று சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து வேறு நபர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தில் இறந்தது என் தகப்பனார் நான் காப்பீடு பெறுவதற்கு நான் இந்த வழக்னை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.